# கன்னியாகுமரி மாவட்ட இஸ்லாமியர்களின் தர்ஹா வழிபாட்டு முறைகள்

# Dargah Worship Practices of Muslims in Kanyakumari District

***முனைவர் ப. துல்ஹஜீதா பேகம்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
கருப்பண்ணன் மாரியப்பன் கல்லூரி, திருப்பூர்

**Dr. P. Dulhajeeda Begum**
*Assistant Professor, Tamil Department*
*Karuppannan Mariyappan College, Tiruppur*

## ஆய்வுச் சுருக்கம்

*இஸ்லாமியர்களின் தர்ஹா வழிபாடு என்பது நாட்டுப்புறச் சமயம் சார்ந்ததாகவே அமைகிறது. வழிபாடு பற்றியும், வழிபாடு பற்றி அறிஞர்கள் கூறும் கருத்தும் இவ்வாய்வுக் கட்டுரையில் சொல்லப்பட்டுள்ளன. தர்ஹா வழிபாடு, தர்ஹா பற்றி அறிஞர்கள் கூறும் கருத்துக்கள் போன்றவை பற்றியும் கன்னியாகுமரி மாவட்டத்தில் காணப்படும் தர்ஹாக்கள், தர்ஹாக்களில் மக்கள் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுதல் போன்றவை பற்றியும் ஆய்வில் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வுக் கட்டுரையில் கிடைத்த செய்திகளைத் தொகுத்து தொகுப்புரையில் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாராய்ச்சிக்கட்டுரையில்கண்டறியப்பட்ட செய்திகளும் மேலாய்வு பற்றியும் முடிவுரையில் கூறப்பட்டுள்ளன.*

***முக்கியச்சொற்கள்:*** *தர்ஹா, இறைநேசர், ஜியாரத்து, மவ்லூது, ராத்திபு, பாத்திஹா, தப்ரூக், குர்ஆன், யாஸீன் சூறா.*

## Abstract

*The worship of the Dargah of the Muslims is based on the folk religion. The research paper deals with the worship and the views expressed by the scholars on the worship of the Dargah, the views of the scholars on the Itarha, the dargahs in Kanyakumari district and the fulfillment of the vows of the people in the dargahs based on the information obtained from the study. The findings of this paper are summarized in the summary.*

***Keywords:*** *Dargah, Iranesar Ijiaraththu, Mawludu Raatibui, Fatihaai, Tabruk, Qur'an Iyazin Surah*

**Citation**

Dulhajeeda Begum, P. "Dargah Worship Practices of Muslims in Kanyakumari District." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 2, 2023, pp. 45–51.
**DOI**: *https://doi.org/10.5281/zenodo.20096688*

**முன்னுரை**

*கிராம மக்களின் வாழ்வோடு தொடர்புடையதும் அவர்களால் மரபு ரீதியாக வழிவழியாக வணங்கப்பட்டு வருவதும் அவர்களுக்கே உரியதுமான இயற்கைத் தன்மைகளை உடையதும் நாட்டுப்புறச் சமயம் எனலாம். இஸ்லாமியரின் கடவுளும், வாழ்க்கை முறையும் மார்க்கவிதிகளுக்கு உட்பட்டவை. பிற மதத்தைச் சார்ந்த மக்களோடு வேறுபட்டு இருந்தாலும் இஸ்லாமியர்களின் தர்ஹா வழிபாட்டை நாட்டுப்புறக் கண்ணோட்டத்தோடு பார்த்தால் தங்களது மண்ணின் சாயலை மறக்காமல் மரபு வழியாகப் பின்பற்றிக் கொண்டே வருவதைத் தெரிந்து கொள்ள முடிகின்றது. இத்தகைய இஸ்லாமியர்களின் தர்ஹா வழிபாட்டு முறைகளைப்பற்றி இக்கட்டுரையானது ஆய்வு செய்ய முயல்கிறது.*

**வழிபாடு என்றால் என்ன?**

*வழி-இறைப் போற்றுதற்குரிய வழி. பாடு - அடைவதற்குரிய வழியை அடைவதற்கு மனிதன் மேற்கொள்ளும் செயல்முறைகளே வழிபாடு [1] எனப்படும்.*

*சிக்மண்டு பிராய்டு என்பார் வழிபாடு என்பது மனிதனுடைய அச்ச உணர்விலிருந்தும் குற்ற உணர்விலிருந்தும் தோன்றியிருக்கலாம் [2] என்று கருதுகிறார்.*

**வழிபாட்டின் வகைகள்**

*1.முன்னோர் வழிபாடு 2.ஆவி வழிபாடு 3.இறை வழிபாடு 4.இயற்கை வழிபாடு 5.நாட்டுப்புற வழிபாடு என்று பிரிக்கலாம். இஸ்லாமியர்களின் தர்ஹா வழிபாடு நாட்டுப்புற வழிபாடு சார்ந்தவையாக அமைகிறது.*

**நாட்டுப்புறச் சமயம்**

*கிராம மக்களின் வாழ்வோடு பின்னிப்பிணைந்து காணப்படுவதும், அவர்களின் வாழ்வோடு தொடர்புடையதும், அவர்களால் மரபு ரீதியாக வழிவழியாக வணங்கப்பட்டு வருவதும் அவர்களுக்கே உரியதுமாகிய தன்மைகளை உடையதே நாட்டுப்புறச் சமயம் எனலாம். டான்யோடர் நாட்டுப்புறச் சமயம் என்பது அமைப்புக்குட்படுத்தப்பட்டு நிறுவனமாக்கப்பட்டு விட்ட கட்டுப்பாடுகளை கொண்ட சமயங்களுக்கு மாறுபாடானது [3] என்று கூறுகிறார்.*

*நாட்டுப்புறச் சமயத்தில் சைவம், வைணவம் என்ற பாகுபாடுகள் இல்லை.கிறிஸ்தவம், இஸ்லாமியம் என்ற வேறுபாடுகளும் இல்லை. இசக்கியம்மன் கோவிலுக்கு கிறிஸ்தவர்களும் போவார்கள். இந்துக்கள் கோவிலுக்கு முஸ்லீம்களும் போவார்கள். அத்தகைய ஒரு பொது நோக்கோடு நாட்டுப்புறச்சமயம் திகழ்கின்றது.நிறுவன சமயத்தில் இவ்வாறில்லை. இஸ்லாமியர்கள் வழிபாடான தர்ஹா வழிபாடு முற்றிலும் நாட்டுப்புறச் சமயம் சார்ந்ததாகக் காணப்படுகிறது.*

**தர்ஹா விளக்கம்**

*இறைநேசர்கள் அடக்கப்பட்டிருக்கும் புண்ணிய இடங்கள் தர்ஹாக்கள் என்று அழைக்கப்படுகின்றன. மக்கள் அனைவரும் தங்கள் மனக்குறைகள், தங்கள் நாட்டங்கள் நிறைவேறுதல் பொருட்டாகவும் தர்ஹாக்களில் வந்து மன்றாடுகின்றனர். இங்ஙனம் காரியம் நிறைவேறியதன் பொருட்டாக தங்கள் காணிக்கைகளை தர்ஹாக்களில் வைத்து வழிபாடுகள் நடத்துகின்றனர். இறைநேசர்களை இஸ்லாமியர்கள் பல பெயர்களிட்டு அழைக்கின்றார்கள்.*

அவுலியா, வலிமார்கள், ஒலிமார்கள், அல்லாஹ்வுடைய நல்லடியார்கள் என்றெல்லாம் அழைக்கின்றார்கள். இஸ்லாமியம் பரப்புவதற்கும் இறைநேசர் தான் காரணமாக இருக்கின்றனர்.

### தர்ஹா பற்றி அறிஞர்கள் கூறும் கருத்துக்கள்

முஸ்லீம் மகான்கள் அடக்கம் செய்யப்பட்ட இடம் the Place where the muslim saints are buried -[4] என்று க்ரியாவின் தற்காலத் தமிழகராதி விளக்கம் தருகிறது. தர்ஹா என்பது வழிபடும் இடமாக இல்லாமல் ஒரு சமுக நிறுவனமாக பல்வேறு தரப்பினரும் உறவு கொள்ளும் வகையில் உள்ளது.

அரசவை–இறைநேசச் செல்வர்கள் சமாதி கொண்டுள்ள தலங்களை 'தறுகா' என்று அழைப்பர். [5] என்று கென்னத் கிரேக் கூறுகிறார்.

### தர்ஹா வழிபாடு பற்றிய மக்கள் கருத்து

தர்ஹாக்களை மட்டும் இஸ்லாமியர்கள் வழிபடவில்லை. எல்லாம் வல்ல இறைவனை வழிபடுவதற்காக தொழுகைப் பள்ளிகளையும், இறைநேசர்களது அடக்கவிடங்களான தர்ஹாக்களையும் இஸ்லாமியர்கள் சிறப்பாக அமைத்து மகிழத் தவறவில்லை6 இஸ்லாமிய சமயப் பெரியோர்கள் தர்ஹாக்களில் நிகழ்த்தப்பெறும் நடைமுறை நிகழ்ச்சிகளான தலை பணிதல், முத்தமிடுதல், நீர் பருகுதல், மலர் வைத்தல் போன்றவற்றைக் கண்டிக்கின்றனர். சமாதி வழிபாடுதான் தர்ஹா வழிபாடு ஆகும்.வழிபடும் முறை உருவாகிவிடும் என்ற அடிப்படையில் சமாதிகளின் மேல் கட்டிடம் எழுப்புவதை முகம்மது (ஸல்). அவர்கள் தடை செய்தார்கள். ஆனாலும் அவர் காலத் திற்குப்பின் சமாதிகளின் மேல் கட்டிடம் எழுப்பும் வழக்கமானது தீவிரமானது.

### கன்னியாகுமரி மாவட்டத்தில் காணப்படும் தர்ஹாக்கள்

இறைநேசர்கள் அடங்கியுள்ள தர்ஹாக்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகமாகவே காணப்படுகின்றன. தக்கலை, குளச்சல், திட்டுவிளை,திருவிதாங்கோடு, ஆளூர், வடக்குச்சூரங்குடி, கோட்டார், மிடலாம், வள்ளவிளை, மேக்கா மண்டபம் , கடையாலுமூடு போன்ற இடங்களில் தர்ஹாக்கள் காணப்படுகின்றன. இத்தகைய தர்ஹாக்களில் சென்று இஸ்லாமிய மக்கள் வழிபாடு நடத்துகின்றனர்.

### நாட்டுப்புற வழிபாட்டின் இயல்புகள்

நாட்டுப்புற வழிபாட்டின் இயல்புகளைப் பற்றிச் சொல்லும் போது லூர்து. தே பின்வருமாறு இயல்புகள் இருக்கும் என்று எடுத்துச் சொல்கிறார்.

1. குடும்பத்தில் அல்லது குலத்தில் இறந்தோர், கொலை செய்யப்பட்டோர்,ஆவிகள்,மூத்தோர், கன்னிகள் போன்றோரும் மரங்கள், ஆயுதங்கள், கற்கள் போன்றவையும் தெய்வங்களாகவே வழிபடப்படும்.
2. விழாக்கள் செய்யக் குடும்ப,குல, சாதிய ஊர் அமைப்புகள் இருக்கும்.
3. ஆண்டுக்கு ஒருமுறை அல்லது சில ஆண்டுகளுக்கு ஒரு முறை பொருளாதாரச் செழிப்பிற்கேற்ப வழிபாடு நடைபெறும்.
4. உயிர்ப்பலிகள் இருக்கும் என்றவாறு7 கூறுகின்றார்.

நாட்டுப்புறத் தெய்வங்களின் வழிபாடு மனித நாகரிகத்தின் தோற்றத்துடன் தொடங்கியதனால் இதனையும் கூடலூர் ஆர்ப்பாட்டமான வழிபாடாக, ஆடு, கோழி

*போன்றவற்றைப் பலி கொடுத்து வழிபடும் மரபு தொடர்கிறது. இதிலும் கூட ஒரு பொதுத்தன்மை நிலவுகிறது என்றும் அறுதியிட்டுக்கூற இயலாது[8].*

*இத்தகைய வழிபாட்டு முறை இஸ்லாமியர்களிடமும் காணப்படுகிறது என்பதனை இவ்வாய்வுக் கட்டுரையில் காணமுடிகின்றது.*

*இறைவனை வழிபடும் போதும் தர்ஹாக்களில் இறைநேசரைச் சென்று வழிபடும் போதும் இஸ்லாமிய மக்கள் கோழியோ, ஆடோ அறுத்து பலி கொடுப்பர். அப்போது அதற்கு முதலில் தண்ணீர் சிறிது கொடுத்த பின்னரே அறுக்கின்றனர். ஏனெனில் அது இறக்கும் தருவாயிலும் தம்மை வாழ்த்திவிட்டுச் செல்லும் என்ற நம்பிக்கைதான் காரணம்.*

*பலிகளின் இயல்புகளும், அவற்றின் சமூகச் செயல்பாடுகளும் பலதிறப்பட்டவை. நாட்டார் வழிபாடுகளில் பெரும்பாலும் ஆடு, கோழி, சேவல், பன்றி, எருமை போன்ற உயிர்கள் பலியிடப்படுகின்றன. பார்ப்பனர்களும் ஒரு காலத்தில் உயிர்ப்பலியிட்டனர் என்பதற்கு மணிமேகலை சான்று பகரும்[9]. என்று லூர்து.தே கூறுகிறார். கன்னியாகுமரி மாவட்டத்தில் காணப்படும் பீர்முஹம்மது அப்பா தர்ஹாவிலும் (தக்கலை), ஆளூரிலுள்ள சேனம்மாள் நாயகி (ரலி) தர்ஹாவிலும், இந்த உயிர்ப்பலியிடுதல் நிகழ்ச்சி தற்போதும் நடைபெற்று வருவதனைக் கள ஆய்வின் மூலமாகக் காணமுடிந்தது.*

**நேர்த்திக்கடன்**

*நேர்த்திக்கடன் என்பது இறைவனுக்குச் செய்யும் கைம்மாறு என்று நம்புகின்றனர். நேர்த்திக்கடன் என்பது நேருதல், வேண்டுதல் என்ற பொருளில் ஆளப்படுகிறது. தெய்வத்தை வழிபடும் மக்கள் தங்களுக்குள்ள குறைகளைக் கூறி, அக்குறை தீர்ந்ததும் செய்யப்படும் சடங்கிற்கு நேர்த்திக்கடன் என்று பெயர்[10]. மேலும் நிலப்பகுதியில் வழங்கும் எழுதாத சட்டம்[11] என்று கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது.*

*பொதுவாக இந்துக்கள் வழிபடும் கோவில்களுக்கு இஸ்லாமியர்கள் சென்று வழிபடுவது அரிது. அதே சமயம் கன்னியாகுமரி மாவட்டத்தில் காணப்படும் தர்ஹாக்களில் இந்துக்கள் செல்வதும் அவர்களுடைய குறைகளை முறையிடுவதும் வேண்டுதல்களை நிறைவேற்றுவதையும் நேர்த்திக்கடன் செய்வதையும் இன்றைக்கும் காணலாம். இது புதுமையானது மட்டுமல்லாமல் சமய ஒற்றுமைக்கேற்ப சிறப்பானதொரு நிகழ்வு எனவும் கருதலாம்.*

**நேர்ச்சை வைத்தல்**

*இஸ்லாமியர்களின் தர்ஹா வழிபாட்டின் போது பல்வேறு நேர்ச்சைகள் வைக்கின்றனர். தப்ரூக் எனப்படும் ஊர் நேர்ச்சை ,அடியறை நேர்ச்சை, பீர்ப்பானை நேர்ச்சை, மூன்றாம் ஜியாரத்து நேர்ச்சை, காணிக்கை நேர்ச்சை போன்றவையாகும்.*

**தப்ரூக் எனப்படும் ஊர் நேர்ச்சை**

*கன்னியாகுமரி மாவட்டத்தில் காணப்படும் தர்ஹாக்களில் தப்ரூக் எனப்படும் ஊர் நேர்ச்சை வைத்து வழிபாடு நடத்துகின்றனர். இது பொதுவான நேர்ச்சையாக அமைகிறது. இந்த நேர்ச்சையினை இஸ்லாமிய மக்கள் இறை வேதமான திருக்குர் ஆன் ஓதியும், மவ்லூது*

*ஓதியும் மக்களுக்கு வழங்குவார்கள். இதன் மூலமாக மக்களுக்கு நோய் நொடிகள் தீர்ந்துவிடும் என்றும்,வைசூரி போன்ற கொடிய நோய்கள் வராமலும் காக்கலாம் என்று இஸ்லாமிய மக்கள் நம்பி வருகின்றனர். ஒரு தர்ஹாவில் எத்தனை இறைநேசர்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளார்களோ அவர்கள் அனைவருக்கும் ஓதுவார்கள்.இஸ்லாமிய பிறைக்கணக்குப்படி ஒவ்வொரு தர்ஹாவிலும் உள்ள இறைநேசர்களுக்கு வழிபாடும் நேர்ச்சைகளும் வைத்து மவ்லூது ஓதுதலும், ராத்திபு ஓதுதலும் நடைபெறுகின்றது..மவ்லூது என்றால் நல்லடியார்களைப் புகழ்ந்து பாடும் பாடலாகும். இது இஸ்லாமியர்களின் வழக்குச் சொல் தீன்நெறி பரப்புவதாகவும் அமைகிறது. இதனை தர்ஹாக்களில் 9 நாட்களோ, 11நாட்களோ தொடர்ந்து இரவில் ஓதி வருகின்றனர்.*

**காணிக்கை நேர்ச்சை வழிபாடு**

*எல்லா தர்ஹாக்களிலும் எண்ணெயினை விளக்கில் ஊற்றி வழிபடுதல் உண்டு. எண்ணெயினை எடுத்து மண்டையில் தேய்த்தால் மண்டைக்கனம் தீரும் என்ற நம்பிக்கை காணப்படுகிறது. சிலர் எண்ணெயினை எடுத்துக் குடித்துவிடுவர். இதனால் தன்னிடம் உள்ள நோய்கள் குணமாகிவிடும் என்ற நம்பிக்கை உள்ளது. கோட்டார் என்ற ஊரில் காணப்படும் பாஷில்ஷா தர்ஹாவில் நல்லெண்ணெய் கொண்டு வழிபாடு நடத்துவர்.*

**தண்ணீர் வழிபாடு**

*கோட்டாரில் காணப்படும் பாஷில்ஷா தர்ஹாவில் இந்த வழிபாடு காணப்படுகிறது. தீராத நோய் இருப்பவர்கள் நான் தண்ணீர் வைத்து வழிபாடு நடத்துகின்றேன் நோயை தீர்த்துவிடுங்கள் என்று நம்பி தண்ணீரைக்கொண்டு தர்ஹாவில் வைத்துப் பின்னர் அதனை எடுத்துக் குடிக்கின்றனர்.*

**கானப்பயிறு வழிபாடு**

*கிரகப் போக்கு நீங்க வேண்டும் என்ற நம்பிக்கையில் கானப்பயிற்றினை அவித்து செவ்வாய், சனி போன்ற கிழமைகளில் தர்ஹாக்களில் சென்று வழிபாடு நடத்துவார்கள்.*

**உப்பும், நல்ல மிளகும்**

*கோட்டார் பாஷில்ஷா தர்ஹாவிலும், ஆளூர் கோஜ்முஹம்மது தர்ஹாவிலும் மக்கள் தங்கள் முகத்தில் பருக்களோ, உன்னியோ வந்தால் அது போக வேண்டும் என்று நேர்ந்து உப்பும் நல்ல மிளகும் வைத்து வழிபாடு நடத்துவர்.*

**பட்டுத்துணி**

*தர்ஹாக்களில் காணப்படும் இறைநேசர்களின் கபர்ஸ்தானில் பட்டுத்துணி விரித்து வழிபாடு நடத்துவர். இதனால் நோய்கள், பேய் பிசாசுகள் நம்மை ஒன்றும் செய்யாது என்று மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஜான்பக்கீர்ஷா (ஒலி) தர்ஹாவில் இன்றும் பட்டு விரிப்பு வழிபாடு காணப்படுகிறது.*

**தர்ஹா வழிபாட்டில் பெண்களின் பங்கு**

*பெண்கள் இஸ்லாம் சமயத்தைப் பொறுத்தவரை வீட்டை விட்டு வெளியே வருதல் கூடாது. ஆனால் இன்று அதிகமாகப் பெண்கள்தான் தர்ஹாக்களில் சென்று வழிபாடு நடத்துகின்றனர். ஏனைய மதத்தவர்களின் கலாச்சாரத்தினைப் பின்பற்றி இஸ்லாம் சமய கலாச்சாரத்திலும் பெண்கள் தர்ஹாவிற்கு வருகின்றனர் என்பது கள ஆய்வில் பெறப்பட்ட செய்தியாகும். பெண்கள் இஸ்லாமிய வேதமாகிய திருக்குர் ஆனின் இதயம் என்று அழைக்கப்படும் யாஸீன் சூறாவினை மட்டுமே ஓதிவிட்டு வந்துவிட வேண்டும் என்பதே இஸ்லாமிய ஆலிம்கள் கூற்றாகும்.*

**தர்ஹாக்களின் பயன்**

மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வழிபடும் இடமாக தர்ஹாக்கள் அமைகின்றன. இது ஒற்றுமைத் தன்மையை வளர்க்கிறது. சாதி, மத, பேதம் அகற்றப்படுகிறது. மக்கள் வாழ்க்கை மேம்பட தர்ஹாக்களை நாடிச்சென்று மன அமைதியைத் தேடிக் கொள்கின்றனர்.

**தொகுப்புரை**

1. வழிபாடுகள் பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன.
2. நாட்டுப்புறச் சமயம் பற்றியும் நாட்டுப்புற வழிபாட்டின் இயல்புகள் பற்றியும் அறிந்து கொள்ள முடிகிறது.
3. இஸ்லாமியர்களின் தர்ஹா வழிபாடு, தர்ஹா வழிபாடு குறித்த செய்திகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் காணப்படும் தர்ஹாக்கள் பற்றியும் இவ்வாய்வுக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளன.
4. தர்ஹாவில் மக்கள் செலுத்தக்கூடிய நேர்த்திக்கடன்கள் பற்றியும், பல்வேறு நேர்ச்சைகள் வைத்து வழிபாடு நடத்துவது பற்றியும் தர்ஹா வழிபாட்டில் பெண்களின் பங்கு முக்கியமனதாகக் கருதப்படுவது பற்றியும் சொல்லப்பட்டுள்ளன.

**முடிவுரை**

இஸ்லாமியர்கள் இறைவன் ஒருவனே என்று நம்பிக்கை கொண்டிருந்தாலும் தர்ஹாக்களில் காணப்படும் இறைநேசர்களை வழிபடுவதிலும் அதிகமான ஈடுபாடு உடையவர்களாக இருக்கின்றனர்என்பதுதெரியவருகிறது.இஸ்லாமியர்களின்தர்ஹாவழிபாட்டில்பெண்களின்பங்கு முக்கியமானதாகக் காணப்படுகிறது. இஸ்லாமியர்களின் தர்ஹா வழிபாடு நாட்டுப்புறச் சமயம் சார்ந்ததாகவே அமைகிறது. மேலாய்வுகளுக்கு உட்படுத்தினால் அதிகமான இறை நேசர்களைப் பற்றிய தகவல்களும், வழிபாட்டு முறைகளும் பற்றிய செய்திகளும் கிடைக்கும் என்பது உறுதி.

**அடிக்குறிப்புக்கள்**

1. தமிழரசி மு.பாண்டி, முனீஸ்வரர் வழிபாடும் சமுதாயமும், ப.9,2007.
2. சோதிமணி .இரா.,பத்ரகாளி வழிபாடு, ப.96.
3. சண்முக சுந்தரம் சு.,நாட்டுபுற இயல்,ப160,1994, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
4. க்ரியாவின் தற்காலத் தமிழகராதி, ப 508,1992.
5. கென்னத்கிரேக்,கன்னியாகுமரிமாவட்ட இஸ்லாமியநம்பிக்கைகள்,ப.86,1971,கிறிஸ்தவ இறையியல் நூலோர் குழு.
6. எஸ் .எம்.கமால், முஸ்லீம்களும் தமிழகமும், ப.163
7. சண்முகசுந்தரம்.சு, நாட்டுப்புற இயல், ப.163,1994, மணிவாசகர் பதிப்பகம்,சென்னை.
8. அறிவுடை நம்பி, ம.சா,தமிழக நாட்டுப்புற ஆய்வுகள், ப.129,2010, முதற்பதிப்பு
9. லூர்து.தே.,நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், ப. 41,1997,நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை.
10. முனைவர் சண்முகசுந்தரம்.அ, முனைவர். அண்ணாதுரை. த, நாட்டுப்புறவியல் சிந்தனைகள், ப.85, முதற்பதிப்பு, டிசம்பர்-2008.
11. கலைக்களஞ்கியம், ப.164, தொகுதி -9.

**தகவலாளர்கள்**

1. *பீர்முஹம்மது, வயது, 55, கோட்டார், நாகர்கோவில்.*
2. *பார்சாம்மா, வயது 60, தெற்குப்பள்ளித் தெரு, ஆளூர்.*
3. *காஜரா பீவி, வயது 44, தக்கலை.*
4. *பாத்திமா, வயது 35, இடலாக்குடி, நாகர்கோவில்.*
5. *ஸப்ரீன், வயது 43, லாயம்.*

## References


1. *Thamizharasi M.Pandi, Muneeswarar Worship and Society, P.9, 2007.*
2. *Sodhimani. R., Batrakali Worship, P.96.*
3. *Shanmuga Sundaram S., Nattupura Iyal, P.160, 1994, Manivasagar Publishing House, Chennai.*
4. *Kriya's Modern Tamilarathi, P.508, 1992.*
5. *Kenneth Craig, Kanyakumari District Islamic Beliefs, P. 86, 1971, Committee of Authors of Christian Theology.*
6. *Kamal, S.M., Muslims and Tamil Nadu, P.163.*
7. *Shanmugasundaram. S., Folk Science, P.163, 1994, Manivasagar Publishing House, Chennai.*
8. *Arivudai Nambi, M.S., Tamil Nadu Folk Lore Studies, P.129, 2010, First Edition.*
9. *Lourdes. D. Inn., Some Basics of Folk Liturgy, P.41, 1997. Centre for the Study of Folk Liturgy, Palayamkottai.*
10. *Shanmugasundaram A., Annadurai. T., Nattupuraviyal Sinthanigal, P. 85, 1st edition, December 2008.*
11. *Encyclopedia, P.1, Vol.9.*